# DRAFT

# சைவநெறி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 1

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

**சைவநெறி**
**ஆசிரியர் வழிகாட்டி**
**தரம் 1**

முதற் பதிப்பு 2016
தேசிய கல்வி நிறுவகம்

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

## கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலைநோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள், தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பணியினை ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைச் செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும்போது (மாணவர் செயன்முறை) கன்பூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

  "அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர்.
  ஆனால், செயல்ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும்போது,
  கற்றுக்கொள்கின்றனர்."

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும்போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்டக் கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினைத் தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் / தகுதிப்பாடுகளை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு, புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;
- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;
- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங்களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் உளப்பாங்கு (Atti tute), பகுப்பாய்வு (Anolysis), செயல் / செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Account-ability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையை நோக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற்கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறுபேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை யெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

**ஆலோசனை** : **வண.கலாநிதி மாம்புல்கொட சுமணரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**பேராசிரியர். வ. மகேஸ்வரன்**
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர், இந்து கலாசாரத் திணைக்களம்.

**திரு. கே.ஏ.டி.பி. சரத்சந்திர**
பணிப்பாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்ப கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**அனுமதி** : கல்வி அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**பாட இணைப்பாக்கம்** : **திருமதி. சகுந்தலா ரணசிங்க,**
உதவி விரிவுரையாளர்,
முன்பிள்ளை விருத்தி மற்றும் ஆரம்ப கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**உள்ளக வளவாளர்** : **செல்வி வி. விஜயலெட்சுமி,**
பணிப்பாளர்,
தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**வெளிவாரி வளவாளர்** : **திருமதி லலிதாம்பிகை சண்முகநாதன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக் கல்விக் கிளை, கல்வி அமைச்சு.

சரவை பார்த்தல் : **திரு.மு.தயாநிதி,**
சிரேʻட விரிவுரையாளர்,
தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

கனணி வடிவமைப்பு: **திரு. ஜெயகாந்தன்**

விடயப்பதிப்பு : **திரு.வி.என்.எஸ்.உதயசந்திரன்,**
சிரேʻட விரிவுரையாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்
கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

## சைவநெறி ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆரம்பக் கல்வி பயிலும் சைவ சமயச் சிறார்கள் தமது அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமான சைவ சமய ஒழுக்கம், அறநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுறக் கடைப்பிடிக்கவும் நல்ல விழுமியப் பண்புகளைத் தன்மயமாக்கிக் கொள்ளவும் உள்வாங்கிக் கொள்ளவும் உறுதுணையாக அமையும் விதமாக இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், சமயக்கல்வி தொடர்பான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இப்பாடத்திட்டம் அமையப்பெற்றுள்ளது. இப்பாடத்திட்டத்தில் உள்ள சமய எண்ணக்கருக்களையும் பழக்க வழக்கங்களையும் அறிவு ரீதியாக மட்டுமன்றி, அனுபவ ரீதியாகவும் மாணவர் பெற்று சமூகப் பண்பாடுகளுடன் ஒழுக்க, விழுமியப் பண்புகளைக் கொண்டவர்களாக வளர வழிகாட்டுவதே இப்பாடத்திட்டத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும்.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சைவநெறிப் பாடத்துக்கான தேர்ச்சிகள் வருமாறு:**

1. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.
2. பெற்றோர், பெரியோர்களுக்குப் பணிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார்.
3. சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.
4. தோத்திரப் பாடல்களையும், அறநெறி உணர்த்தும் பாடல்களையும் பாடுவார்.
5. கதைகள் ஊடாகச் சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்திசெய்து கொள்வார்.
6. நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.
7. சமய வழக்காறுகளையும், ஒழுகலாறுகளையும், விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

தரம் 1-5 வரை சைவ சமய பாடத்துக்கான கற்றல் - கற்பித்தலை மேம்படுத்துவதற்காக, தேவையான இடங்களில் பொருத்தமான அணுகு முறைகளைக் கையாளுதல் நன்று. அத்துடன் ஆசிரியர் முன்மாதிரியாகச் செயற்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாகச் சில அணுகு முறைகள் கீழே தரப்படுகின்றன.

- கதை கூறல் (சமயக் கதைகள், நாயன்மார் வாழ்வு பற்றிய கதைகள் போன்றன)
- நடித்துக் காட்டல் (சமயக் கதைகள், நிகழ்வுகள் போன்றன)
- செய்து காட்டல் (வழிபாட்டு முறைகள்)
- மாதிரிகள் அமைத்தல் (வணங்கும் இடம் அமைத்தல்)
- பாவனை செய்தல் ( நாயன்மார் வாழ்வு - சிவனடியார்)
- செயற்பாடுகளில் ஈடுபடுதல் (பகிர்ந்துண்ணல், ஏழைகளுக்கு உதவுதல்)
- மனனம் செய்தல் (சிவமந்திரம், திருமுறைகள், ஆத்திசூடி - ஓதுதல்)
- இசையுடன் பாடுதல் (திருமுறைகள், ஆத்திசூடி போன்ற பனுவல்கள்)

- கலந்துரையாடுதல் (சேகரிக்க வேண்டிய பூசைப் பொருட்கள், தமது ஊரிலுள்ள ஆலயங்கள்)
- வெளிக்களப் பயணம் (ஊரிலுள்ள ஆலயங்கள்)
- நடித்துக் காட்டல் (சமயக் கதைகள், நாயன்மார் வாழ்வு போன்ற கதைகள்)
- ஆசிரியர் முன்மாதிரியாக நடத்தல் (தினசரி காலைப் பிரார்த்தனையில் பங்குகொள்ளும் செயற்பாடுகள்)
- சிரமதானம், பொதுப் பணி போன்றன செயற்பாடுகளில் ஈடுபடுதல்

இவ்வாறான செயற்பாடுகளுடன் கூடிய மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாளுவதன் மூலம் மாணவரிடையே உற்சாகத்தையும் வழிகாட்டலையும் ஏற்படுத்தமுடியும்.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. பணிப்பாளர் அவர்களின் செய்தி | iii |
| 02. பிரதிப் பணிப்பாளர் அவர்களின் செய்தி | v |
| 03. கலைத்திட்டக் குழு | vi |
| 04. சைவநெறி பாட ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vii |
| 05. அறிமுகம் | x |
| 06. தேசிய இலக்குகள் | xi |
| 07. அடிப்படைத் தேர்ச்சிகள் | xii |
| 08. ஆரம்பக் கல்வித் திட்டம் | xiv |
| 09. நேர ஒதுக்கீடு | xv |
| 10. பாடத்திட்டம் | xvi |
| 11. பாடத்திட்டத்தின் நோக்கம் | xvii |
| 12. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள் | 1-32 |

## அறிமுகம்

தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளிடையே, சமய மற்றும் விழுமியங்களுக்குரிய தேர்ச்சிகளைப் பிள்ளைகளிடையே கட்டியெழுப்புவது சமய பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.

சிறு குழந்தையின் பிஞ்சு மனதிலே புதியதோர் விடயத்தை விதைப்பது இலகுவான விடயமாகும். அவ்வாறே, நற்பழக்க வழக்கங்களுக்குப் பிள்ளைகளை இசைவுபடுத்துவதும் இலகுவில் ஆற்றக் கூடியவொன்றாகும். சிறு பிள்ளைகளில் காணப்படும் பண்புகளுக்குப் பொருந்தும் வகையில் இங்கு பல்வேறு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாட உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாகப் பிள்ளைகளுக்கு உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்கும் அச்செயற்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டும் என நம்புகின்றோம்.

சமூகத்தில் சமாதானம் மற்றும் ஒழுக்கம் உருவாகுவதற்குச் சமயங்களினது பங்களிப்பு அத்தியாவசியமாகும். பல விதங்களிலும் வலுவூட்டப்படும் நல்வாழ்வுக்குச் சமயம் வழிவகுக்கின்றது. சமூகத்தில் நற்பண்புகளுடனும் கௌரவத்துடனும் வாழ்வதன் முக்கியத்துவத்தைச் சமயம் எமக்கு அளிக்கின்றது. அதுமட்டுமல்ல, எமது நம்பிக்கையின் அடிப்படையில் மரணத்தின் பின்னர் நிலையான வாழ்வு கிடைக்கவும் சமயம் வழிகாட்டுகின்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டினை ஆரம்பித்தல் வேண்டும். இச் செயற்பாட்டுக்களை ஆரம்பித்து, பாரிய பங்களிப்பினைச் செய்யவிருக்கும் அதிஷ்டசாலி ஆசிரியர் நீங்கள் ஆவீர்கள். ஆகவே, உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றோம்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

**அடிப்படைத் தேர்ச்சிகள்**

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில்நுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதிகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.


தொடர்பாடல் தேர்ச்சிகள்
ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
ஓய்வு நேரத்தைப் பயன் படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்
முதன்மை நிலை 1
தரம் 1
தரம் 2
முதன்மை நிலை 2
தரம் 3
தரம் 4
முதன்மை நிலை
தரம் 5
தாய்மொழி
ஆங்கிலம்
இரண்டாவது தேசிய மொழி
கணிதம்
சமயம்
செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
பிள்ளையின் விருப்புக்கும் சிந்தனைக்குமான தெரிவுப்பாடம்
இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்


கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு
விளையாட்டு விநோதச் செயல்கள்
செயற்பாடுகள்
எழுத்துவேலை
தரம் 1
தரம் 5

# நேர ஒதுக்கீடு
## முதன்மை நிலை ஒன்று (தரம் 1,2)

| | பாடம் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தாய் மொழி | 5.00 மணித்தியாலம் |
| 2. | கணிதம் | 3.30 மணித்தியாலம் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5.30 மணித்தியாலம் |
| 4. | சமயம் | 1.15 மணித்தியாலம் |
| 5. | இரண்டாம் தேசிய மொழி | 30 நிமிடம் |
| 6. | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு15நிமி) |
| 7. | ஓய்வு | 1.15 மணித்தியாலம் (நாளொன்றுக்கு15நிமி) |
| 8. | உணவு வேளை | 50 நிமிடம் (நாளொன்றுக்கு 10நிமி) |
| 9. | உடல் நலச் செயற்பாடுகள் | 1.40 மணித்தியாலம் (நாளொன்றுக்கு20நிமி) |
| 10. | பாடம் தொடர்பான செயற்பாடு | 30 நிமிடம் (வாரம் ஒருநாள்) |
| வாரத்திற்கான மொத்தக் காலம் | | 21 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |

# பாடத்திட்டம்

# பாடத்திட்டத்தின் நோக்கம்

.

1. இறை நம்பிக்கையையும் பக்தியையும் ஏற்படுத்துதல்.

2 சைவ சமய அடிப்படை உண்மைகளை விளங்கி அதன்படி வாழ்வதற்கு உதவுதல்.

3 சமய நடைமுறைகளையும் ஒழுக்க, விழுமியப் பண்புகளையும் கடைப்பிடித்து வாழ்வதற்கு வழிப்படுத்தல்

4. சைவ அடியார்கள், பெரியார்கள் வரலாற்றையும் தொண்டுகளையும் அறியச்செய்து அவர்களை முன்மாதிரியாகக்கொண்டு வாழ்வதற்கு வழிகாட்டுதல்.

5. பொது வாழ்க்கைப் பண்புகளையும் சமய நம்பிக்கைகளையும் பின்பற்றச் செய்தல்.

6 ஏனைய சமயங்களையும் அவற்றின் பண்பாடுகளையும் மதித்து அவர்களுடன் ஒற்றுமையாக வாழும் மனப்பாங்கை ஏற்படுத்தல்

7. சமயப்பற்றை விருத்திசெய்து முன்மாதிரியான சைவப் பிள்ளையாக வாழ்வதற்குப் பயிற்றுவித்தல்.

8. தோத்திரப் பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்தல்.

9. ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கும், முறைப்படி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் பயிற்றுவித்தல்.

10. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களிடத்தே அன்பு பாராட்டி வாழ்வதற்கும் சுற்றாடலைப் பேணி வாழ்வதற்கும் பயிற்றுவித்தல்.

# பாடத்திட்டம்

| தொனிப்பொருள | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. கடவுள் நம்பிக்கை | 1. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார். | 1.1 கடவுளை வணங்கியே கருமமாற்றுதல்<br>• பிள்ளையார்<br>1.2 சிவபெருமானின் திருவருட்செயல்களைப் போற்றுதல்<br>• சிவபெருமான்<br>1.3 கடவுள் நம்பிக்கையை விருத்தி செயதல்<br>• நாம் சைவ சமயத்தவர் |
| 2. வாழ்விற் சைவம் | 2. பெற்றோர், பெரியோர்களைப் பணிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார். | 2.1 பெற்றோரே எமது கண்கண்ட தெய்வங்கள் என்பதை ஏற்று மதிப்பளித்தல்<br>• எம்மைக் காப்பவர் பெற்றோர் |
| 3. சமய நம்பிக்கையும் வழிபாடும் | 3. சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார். | 3.1 நித்திய கடமைகளைச் செய்தல்.<br>• சிவசின்னங்கள்<br>• நித்திய கடமைகளைச் செய்வோம்<br>3.2 சைவ சமய வழிபாடுகளிலும் விழாக்களிலும் பங்குகொள்ளல்<br>**ஆலய வழிபாடு**<br>• பூசைப் பொருட்களைச் சேகரித்தல்<br>• ஆலய வரலாறு<br>**வீட்டு வழிபாடு**<br>• காலையும், மாலையும் கடவுளை வணங்குதல்<br>3.3 • ஆலய வரலாறு<br>3.4 **வீட்டு வழிபாடு**<br>• காலையும், மாலையும் கடவுளை வணங்குவோம்<br>3.5 **வீடுகளில் நடைபெறும் சமயப் பண்டிகைகள்**<br>• தைப்பொங்கல்<br>• பட்டிப்பொங்கல்<br>3.6 **பாடசாலையில் சமயக் கடமைகள்**<br>• தினசரி காலைப்பிரார்த்தனை |

| தொனிப்பொருள | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| 4. தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும் | 4. தோத்திரப் பாடல்களை-யும் அறநெறி உணர்த்தும் பாடல்களையும் பாடுவார். | 4.1 தோத்திரப் பாடல்களை மனனம் செய்து பாடுதல் - சைவத் திருமுறைகள்<br>• **தேவாரம்**<br>01. தோடுடைய... (சம்பந்தர்)<br>02. தலையே நீ வணங்காய... (அப்பர்)<br>03. பித்தா பிறை சூடி... (சுந்தரர்)<br>• **பெரியபுராணம்**<br>உலகெலாம்... (சேக்கிழார்)<br>4.2 அறநெறி உணர்த்தும் பாடல்களை மனனம் செய்து பாடுதல்<br>• **ஆத்திசூடி** (1-12 அடிகள்) |
| 5. சமயக் கதைகள் | 5. கதைகள் ஊடாகச் சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார். | 5.1 சமயக் கதைகளை இறை நம்பிக்கையுடன் கூறுதல்<br>• தாயும் ஆனார்<br>5.2 பெற்றோரே உலகம் (மாம்பழக் கதை) |
| 6. இறை அடியார்கள் | 6. நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார். | 6.1 சமய குரவர்களின் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுதல்<br>• திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதை |
| 7. சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும் | 7. சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார். | 7.1 கனம் பண்ணுவோம்<br>7.2 ஏழைகளுக்கு உதவுவோம்<br>7.3 சுத்தம் பேணுவோம்<br>7.4 உயிர்களிடம் இரக்கம் காட்டுவோம்<br>7.5 வீட்டில் ஒற்றுமையாகச் செயற்படுவோம்<br>7.6 உண்மை பேசுவோம்<br>7.7 பகிர்ந்து உண்ணுவோம்<br>7.8 சைவப் பண்புகளைக் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வோம்<br>1. நல்ல பிள்ளை தினம்,<br>2. உயர்ந்த செயல்கள்,<br>3. விழுமியம் என்னும் மரத்தின் உச்சிக்கு ஏறுதல். |

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

**தொனிப்பொருள்** : **கடவுள் நம்பிக்கை**

**தேர்ச்சி** : 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **பிள்ளையார்**

**கற்றற் பேறுகள்** :

- முதல் வணக்கத்துக்குரியவர் பிள்ளையார் என்பதனை உணர்ந்து வழிபடுவார்.
- எந்தச் செயலைச் செய்ய முன்பும் பிள்ளையாரை வணங்க வேண்டும் எனவும், அதனால் அந்தச் செயல் நிறைவேறும் எனவும் விளங்கிச் செயற்படுவார்.
- பிள்ளையாரை விருப்புடன் வழிபடுவார்.
- பிள்ளையாரை வணங்கும் முறையினைச் செய்து காட்டுவார்.
- **ஓம் கணபதயே நம** எனும் மந்திரத்தை உச்சரித்து பிள்ளையாரை வழிபடுவார்.

**வளங்கள்** :

- பிள்ளையார் சிலை அல்லது திருவுருவப் படம்
- பிள்ளையார் பாடல்கள்
- படங்கள் (கதைப்படம்)
- பூக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1 :
- வழிபாடு செய்வதற்கு உகந்த இடமொன்றைத் தெரிவு செய்து தூய்மையான விரிப்பொன்று இடப்பட்ட மேசையொன்றை ஒழுங்குபடுத்திக் கொள்க.
- பாதணிகளைக் கழற்றி, இறைவழிபாட்டிற்கு ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துக.
- மாணவர்கள் கொண்டுவந்த பூக்களை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க.
- மாணவர்களை மேசையைச் சுற்றி அரை வட்டமாக நிற்கச் செய்து, பிள்ளையார் சிலையை அல்லது திருவுருவப் படத்தை மேசையின்மீது கௌரவமாக வைத்துக்கொள்க.
- பூக்களைச் சரியாக வைத்து வழிபாடு செய்வதற்கு வாய்ப்பளிக்குக.
- பூக்களைக் கைகளில் ஏந்தியவாறு **ஓம் கணபதயே நம** எனும் மந்திரத்தை உச்சரித்தவாறு பிள்ளையாரின் சிலையைச் சுற்றி, மூன்று முறை மாணவர்களை வலம் வரச் செய்க.

**செயற்பாடு 2** :
- எச்செயலையும் செய்யத் தொடங்கு முன்னர் பிள்ளையாரை வழிபடவேண்டும் என்பதையும், அவ்வாறு தொடங்கும் செயல்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும் என்பதையும் மாணவர்களுக்கு விளக்குக.
- பிள்ளையார் திருவுருவம் இல்லாதபோது, மஞ்சள் அல்லது சாணத்தால் பிள்ளையார் பிடித்து, அறுகம்புல் வைத்து வழிபடலாம் என விளக்குக. (பிள்ளையார் பிடித்துக் காட்டுக.)

**செயற்பாடு 3** •, பிள்ளையாரை வழிபடும் முறையினைச் செய்து காட்டுவதுடன் மாணவர்களையும் அச்செயலுக்காக வழிப்படுத்துக. (தோப்புக்கரணம் போடுதல், நெற்றியில் குட்டி வணங்குதல், கூடிப் பிரார்த்தனைசெய்தல்.)

**கணிப்பீடு** : • பிள்ளையாரை வணங்கும் முறையினைச் செய்து காட்டுவார்
• **ஓம் கணபதயே நம** எனும் மந்திரத்தை உச்சரித்துக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- வகுப்பறையில் பிள்ளையார் திருவுருவப் படம் வைத்து முறைப்படி வழிபடுதல்
- எந்தச் செயலையும் செய்யத் தொடங்குமுன் பிள்ளையாரை வழிபடுதல்.
- பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளின் போது, (சமய விழாக்கள், பொது விழாக்கள்) பிள்ளையார் பிடித்து வழிபடுதல்.

**தொனிப்பொருள்** : **கடவுள் நம்பிக்கை**

**தேர்ச்சி** : 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சம ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : சிவபெருமான்

**கற்றற் பேறுகள் :**

- நாம் அனைவரும் சிவபெருமானின் குழந்தைகள் என்பதை ஏற்று வழிபடுவார்.
- சிவபெருமானின் திருவருட் செயல்களைக் கூறுவார்.
- சிவபெருமானின் இரக்க குணத்தை அறிந்து கூறுவார்.
- அடியவர்களாகிய எங்களைக் காப்பதற்காகச் சிவபெருமான் திருவருட் செயல்களைச் செய்கின்றார் என்பதை உணர்ந்து அவரை வணங்குவார்.

**வளங்கள் :**
- சிவபெருமானின் திருவுருவப் படம்
- காட்சிப் படங்கள்
  - உலகம்
  - உலகில் உள்ள உயிரினங்கள்
- இறுவட்டுக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு** 1:
- சிவபெருமான் கடவுளர்களில் முதன்மையானவர் என்பதனைத் தெளிவுபடுத்துக.
- நாம் அனைவரும் சிவபெருமானின் குழந்தைகள் என்பதைத் தெளிவுபடுத்துக.
- சிவபெருமானே இந்த உலகையும், உயிர்களையும் படைத்துக் காத்து அருளுகின்றார் என்பதனைஉணர வழிப்படுத்துக.

**செயற்பாடு** 2 :
- சிவபெருமானின் திருவுருவப் படத்தை மாணவர் அவதானிக்க இடமளிக்குக.
- சிவபெருமானின் தோற்றப் பொலிவினை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக. (பிறைச் சந்திரனை அணிந்தவர், கழுத்தில் பாம்பு, தலையில் கங்கை, சூலத்தை கையில் ஏந்தியிருப்பவர்)

**கணிப்பீடு :**
- சிவபெருமான் எப்படிப்பட்டவர் என்பதைக் கூறுவார்.
- அவரது தோற்றப் பொலிவினைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**
- சிவபெருமானின் திருவருட் செயல்களைப் போற்றி வழிபடுதல்.
- நாள்தோறும் வழிபாட்டில் ஈடுபடுதல்.

**தொனிப்பொருள்: கடவுள் நம்பிக்கை**

**தேர்ச்சி** : 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : நாம் சைவ சமயத்தவர்

**கற்றற் பேறுகள் :**

- சைவசமயத்தவரின் முழுமுதற்கடவுள் சிவபெருமான் என்பதை உணர்ந்து வழிபடுவார்.
- "**ஓம் நமசிவாய**" என்ற சிவமந்திரத்தை உச்சரித்து வழிபடுவார்.
- சிவபெருமான் எம்மீது அன்பும் இரக்கமும் உடையவர் என்பதை அறிந்து கூறுவார்.
- நாள்தோறும் சிவபெருமானைப் பக்தியுடன் வழிபடுவார்.

**வளங்கள் :**

- சிவபெருமானின் திருக்குடும்பத்தைக் காட்டும் படம்
- பாடநூல் - சைவநெறி தரம் - 01

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு** 1 :

- வீட்டில் தாம் வழிபடும் கடவுளர் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- சைவசமயத்தவர்கள் சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுகின்றனர் என்பதை உணர வழிப்படுத்துக.
- **ஓம் நமசிவாய** என்னும் சிவ மந்திரத்தை உச்சரிக்கப் பழக்குக.
- சிவபெருமானின் குடும்பப் படத்தினை (சிவன், உமை, பிள்ளையார், முருகன்) காட்டிக் கலந்துரையாடுக.
- சைவசமயத்தவர்கள் இத்தெய்வங்களையும் வணங்க வேண்டும் என்பதை வலியுறுத்துக.

**கணிப்பீடு :**

- சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதைக் கூறுவார்.
- சிவகுடும்பத்தில் உள்ள தெய்வங்களின் பெயர்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- வீட்டிலும் பாடசாலையிலும் தினமும் சிவமந்திரத்தை உச்சரித்துப் பக்தியுடன் சிவபெருமானை வழிபடுதல்.

**தொனிப்பொருள்: வாழ்வில் சைவம்**

**தேர்ச்சி** : 2.0 பெற்றோர், பெரியோர்களைப் பணிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார்.

**உள்ளடக்கம்** : எம்மைக் காப்பவர் பெற்றோர்

**கற்றற் பேறுகள் :**

- எம்மைப் பெற்றெடுத்துப் பேணிக்காப்போர் பெற்றோர்கள் என்பதை ஏற்று மதிப்பளிப்பார்.
- பெற்றோர்களே எமது கண்கண்ட தெய்வங்களான பெற்றோரை நாள்தோறும் வணங்குவார்.
- பெற்றோர் பிள்ளைகளுக்காக ஆற்றும் தியாகங்களை அறிந்து மதிப்பளிப்பார்.
- பெற்றோர்களை வயதான காலத்தில் பேணிக்காப்பது தமது கடமை என்பதைக் உணர்ந்து செயற்படுவார்.
- பெற்றோருக்கு கீழ்ப்படிந்தும், அவர்களுக்கு உதவிசெய்தும் வாழவேண்டும் என்பதனை ஏற்று நடப்பார்.

**வளங்கள் :**

- பெற்றோரை வணங்கும் காட்சிப் படம்
- கதைகள்
- கதைப் படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1:**

- எமக்கு வேண்டிய உணவு, உடை, கல்வி போன்ற வசதிகளைச் செய்து தருபவர்கள் யாவர் என வினாவி - கலந்துரையாடலை மேற்கொள்க.
- எம்மைப் பேணிப் பாதுகாப்பவர்கள் யார்? நோயுற்றபோது எமக்காகக் கண் விழித்து எம்மைப் பராமரிப்பவர்கள் யார்? போன்ற வினாக்களை வினாவி, எம்மைப் பேணிக்காப்பவர்கள் பெற்றோரே என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்க.
- பெற்றோர்களே எமது கண்கண்ட தெய்வங்கள் என்பதை உணரச் செய்க.
- நாள்தோறும் பெற்றோர்களை வணங்கி ஆசி பெற வேண்டும் என்பதை வலியுறுத்துக.

**செயற்பாடு 2:**

- பெற்றோரைப் பேணிப் பாதுகாக்கும் செயற்பாடுகளைக் கலந்துரையாடுக.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் சில செயற்பாடுகளை நடித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துக.

**எடுத்துக் காட்டு**
- பெற்றோர் நோயுற்றிருக்கும்போது பராமரித்தல்
- வேலைகளின்போது உதவி செய்தல்
- பெற்றோர் சொற் கேட்டு நடத்தல், பணிதல்

**(ஒவ்வொரு குழுக்களும் தமது பங்களிப்பைச் செயற்பாடுகளாக முன்வைத்தல்.)**

செயற்பாடு 3 :

- பெற்றோர்களுக்கு மதிப்பளிக்கக் கூடிய செயற்பாடுகளைப் பாடசாலையில் நடாத்துவதற்கான வழிவகைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துக.

**எடுத்துக்காட்டு:**

- பெற்றோர் தினவிழா
- அன்னையர் தினம்
- தந்தையர் தினம்
- முதியோர் தினம்

**கணிப்பீடு** :
- பெற்றோர்கள் தமக்காகச் செய்யும் தியாகங்களைக் கூறுவார்.
- பெற்றோர்களுக்கு உதவும் முறைகளை நடித்துக் காட்டுவார்

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- நாளாந்தம் காலையிலும் மாலையிலும் பெற்றோரை வணங்கி ஆசி பெறுதல்
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்
- பெற்றோருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தல்

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமயவழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : • சிவசின்னங்கள்

.

**கற்றற் பேறுகள் :**

- விபூதி, உருத்திராக்கம் முதலியன சிவசின்னங்கள் என்பதைக் கூறுவார்.
- விபூதி அணியும் முறைகளைக் கூறி, அதனை அணிந்து காட்டுவார்.
- விபூதி தரித்துள்ளவர் சைவசமயத்தவர் என அறிந்து கூறுவார்.
- விபூதி தரிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- சிவசின்னங்களைப் புனிதமாகக் கையாள்வார்.

**வளங்கள் :**

- பாடநூல் (தரம் 1, சைவநெறி)
- விபூதி (தரித்துக் காட்டுவதற்கு)
- விபூதி அணிந்தவர்களின் படம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1:**

- சிவசின்னங்களான விபூதி, உருத்திராக்கம் என்பவற்றைக் காட்டி விளக்கமளிக்குக.
- சிவசின்னங்களில் ஒன்றான விபூதி, திருநீறு எனவும் வழங்கப்படும் எனக் கூறுக.
- **"சிவ சிவ"** என்று சொல்லி விபூதியை அணிந்து காட்டுக.
- மாணவர்களை முகம் கழுவித் துடைத்த பின், விபூதியை அணியச் செய்க.

**செயற்பாடு 2:**

- விபூதித் தரிக்கும் வேளை பற்றி கலந்துரையாடுக.
- சிவசின்னங்களைப் புனிதமாகக் கையாள வழிகாட்டுக.
- சிவசின்னங்களை நிலத்தில் சிந்தவிடாது பாதுகாக்க வழிகாட்டுக.

**கணிப்பீடு :**

- சிவசின்னங்கள் எவையெனக் கூறுவார்.
- விபூதியை முறையாக அணிந்து காட்டுவார்

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- விபூதியை நிலத்தில் சிந்தாமல், பயபக்தியுடன் முறையாக அணிதல்
- பெரியவர்கள், பூசகர் என்போரிடம் விபூதியை உரிய முறையில் பெற்றுக் கொள்ளல்.

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமயவழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : • நித்திய கடமைகள்

**கற்றற் பேறுகள் :**

- வீட்டில் ஒவ்வொரு நாளும் தாம் செய்யும் கடமைகளைக் கூறுவார்.
- வீட்டில் நாளாந்தச் சமயக் கடமைகளைச் செய்வார்.
- பாடசாலையில் நாளாந்தம் இடம்பெறுகின்ற சமயக் கடமைகளை முறைப்படி பின்பற்றுவார்.

**வளங்கள் :**

- பாடநூல் (தரம் 1, சைவநெறி)
- சமயக் கடமைகளைக் காட்டும் படங்கள்
- இறுவட்டுக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1:**

- வீடுகளில் நாளாந்தம் செய்யும் கடமைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- வீடுகளில் காலை முதல் மாலை வரை மாணவர்கள் தாம் செய்யும் கடமைகளில் சமயம் சார்ந்த கடமைகளைக் கலந்துரையாடுக.
- பாடசாலையின் நாளாந்தச் செயற்பாடுகளில் முறையாகவும் ஒழுங்காகவும் ஈடுபட வழிப்படுத்துக.
- நாளாந்தக் கடமைகளைச் சரியாகச் செய்யும் மனப்பாங்கை ஏற்படுத்த வழிகாட்டுக.
- இப்பாடலை மாணவர்களுடன் சேர்ந்து பாடுக.

**"காலையில் எழுவோம்**
**கடமைகள் முடிப்போம்**
**கடவுளைத் தொழுவோம்**
**கல்வியைக் கற்போம்"**

**கணிப்பீடு :**

- வீடுகளில் நாளாந்தம் செய்யும் கடமைகள் எவையெனக் கூறுவார்.
- பாடசாலையில் நாளாந்தக் கடமைகளைச் சரியாகச் செய்வார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- காலையும் மாலையும் விபூதி தரித்து, இறைவனை வழிபடல்
- பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வருதல் மற்றும் காலைப் பிரார்த்தனையில் பங்குகொள்ளல்.

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : பூசைப் பொருட்களைச் சேகரிப்போம்

**கற்றற் பேறுகள் :**

- ஆலயத்திற்குக் கொண்டுசெல்லும் பூசைப்பொருட்களைக் கூறுவார்.
- ஆலயத்திற்குக் கொண்டுசெல்லும் பூசைப்பொருட்களை ஒழுங்குபடுத்துவார்.
- ஆலயத்துக்குச் செல்லும்போது பூசைப்பொருட்களைப் புனிதமாக எடுத்துச் செல்வார்.

**வளங்கள் :**
- பூசைப்பொருட்கள்
- பூசைத்தட்டு

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு** 1 :

- ஆலயத்துக்குக் கொண்டுசெல்லும் பூசைப்பொருட்கள் பற்றி கலந்துரையாடுக.
- ஆலயத்துக்குக் கொண்டுசெல்லும் பூசைப் பொருட்களை ஒழுங்குபடுத்த வழிகாட்டுக. (கழுவிச் சுத்தம் செய்து புனிதமான தட்டொன்றில் வைத்தல்)
- பூசைப் பொருட்களைக் கொண்டுசெல்லும் முறையைச்செய்துகாட்டுவதுடன் மாணவர்களையும் அதேபோல் செய்துகாட்ட இடமளிக்குக. (பூசைப்பொருட்களை அரைக்குமேல்ஏந்திய வண்ணம் கொண்டு செல்லுதல்)

**கணிப்பீடு :**

- பூசைப்பொருட்களின் பெயர்களைக் கூறுவார்.
- அவற்றை ஒழுங்குபடுத்திக் காட்டுவார்.
- பூசைப்பொருட்களைக் கோயிலுக்குக் கொண்டுசெல்லும் முறையைச் செய்து காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- பூசைப்பொருட்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தல்.
- அவற்றைக் கொண்டுசெல்ல வேண்டிய முறையைப் பின்பற்றுதல்.

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : ஆலய வரலாறு

**கற்றற் பேறுகள்:**

- தமது ஊரில் உள்ள ஆலயங்களைக் கூறுவார்.
- அந்த ஆலயங்களில் வீற்றிருக்கும் இறைவன் பெயரைக் குறிப்பிடுவார்.
- அவ்வாலயங்களில் காணப்படுகின்ற ஏனைய தெய்வங்களைக் கூறுவார்.
- ஊரில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவார்.

**வளங்கள்** :

- ஆசிரியரின் ஊரில் உள்ள ஆலயத்தின் படம்
  (மாணவர்களின் ஊரில் உள்ள படங்களும் பெறப்படலாம்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1:

- மாணவர்களிடம் தமது ஊரில் உள்ள ஆலயத்தின் பெயரைக் கூறச் செய்க.
- அந்த ஆலயத்தின் தோற்றம் பற்றிய கதைகள் இருப்பின் அவற்றை மாணவர்கள் கூறுவதற்குச் சந்தர்ப்பமளித்து விளக்கமளிக்குக.
- அவ்வாலயத்தில் உள்ள இறைவன் பெயரைக் கேட்டறிக.
- அவ்வாலயத்தில் உள்ள ஏனைய தெய்வங்களின் பெயர்களைப் பற்றிக் கலந்துரையாடுக.
- பெற்றோருடன் சென்று ஆலய வழிபாட்டை மேற்கொள்ள வழிப்படுத்துக.

**கணிப்பீடு** :

- தமது ஊரில் உள்ள ஆலயமொன்றின் பெயரைக் கூறுவார்.
- ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயரையும் அவ்வாலயத்திலுள்ள ஏனைய தெய்வங்களின் பெயர்களையும் கூறுவார்.

**நடைமுறைவாழ்வில் பயன்படுத்தல் தொடர்பானது**

- வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்திற்குச் சென்று வழிபடல்.
- ஆலயத்துக்குப் பூசைப் பொருட்களை உரியமுறையில் கொண்டுசெல்லல்.

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்

**கற்றற் பேறுகள் :**

- வீடுகளில் நாளாந்தம் செய்யப்படும் சமய வழிபாடுகளைக் கூறுவார்.
- பூக்களை வைத்து, தேவாரம் பாடிக் கடவுளை வணங்குவார்.
- காலையும் மாலையும் கடவுளை வணங்குவதை நாள்தோறும் பின்பற்றுவார்.

**வளங்கள் :**

- வீடுகளில் நடைபெறுகின்ற சமய வழிபாட்டு முறைகளைக் காட்டும் அட்டைப்படம்
- சுவாமி அறையில் பெற்றோருடன் இணைந்து வழிபடும் காட்சியைக் காட்டும் படம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1:**

- வீடுகளில் நாளாந்தம் நடைபெறும் சமய வழிபாடுகள் பற்றிக் கலந்துரையாடுக.
- பெற்றோருடன் இணைந்து வீட்டு வழிபாடுகளில் பங்குபெறுவதற்கு வழிகாட்டுக.
  - சுவாமி அறையைச் சுத்தம் செய்தல்
  - சுவாமிப் படங்களுக்கு பூக்களைச் சாத்தி வழிபடல்
- காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்க வேண்டும் என்பதை உணரச் செய்க.
- நாள்தோறும் கடவுளை வணங்கிய பின்பே எந்தவொரு காரியத்தையும் செய்தல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துக.
- ஒவ்வொரு வேளையும் உணவை உண்பதற்கு முன்னர் இறைவனுக்கு நன்றி கூறி வழிபட வழிப்படுத்துக.

**கணிப்பீடு :**

- வீட்டில் தாம் வழிபடும் முறைகளைச் செய்து காட்டுவார்.
- தாம் வழிபடும்போது பாடும் தேவாரங்களைக் கூறுவார்.

**நடைமுறைவாழ்வில் பயன்படுத்துதல்**

- காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்கும் பழக்கத்தைப் பின்பற்றுதல்
- ஒவ்வொரு வேளையும் உணவை உண்பதற்கு முன் இறைவனுக்கு நன்றி கூறி வழிபட்ட பின்னரே உணவு உண்ணுதல்

**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **தைப்பொங்கல்**

**கற்றற் பேறுகள் :**

- சைவசமயத்தவர்கள் கொண்டாடும் சமயப் பண்டிகைகளை அறிந்து கூறுவார்.
- தைப்பொங்கற் பண்டிகை பற்றிக் கூறுவார்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் தைப்பொங்கற் பண்டிகையில் மகிழ்ச்சியுடன் பங்குபற்றுவார்.

**வளங்கள் :**

- தைப்பொங்கல் காட்சிகளைக்கொண்ட இறுவட்டுக்கள்
- காட்சிப்படம்
- பொங்கலுக்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- சைவசமயத்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- தைப்பொங்கற் பண்டிகை எப்போது கொண்டாடப்படுகின்றது என்பதைக் கேட்டறிக.
- தைப்பொங்கற் பண்டிகை கொண்டாடப்படும் முறையினையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.
- தைப்பொங்கல் கொண்டாடப்படுவதன் காரணம் பற்றிக் கலந்துரையாடுக.

**செயற்பாடு 2:**

- பாடசாலையில் தைப்பொங்கல், விழாவினை ஏற்பாடு செய்து, மாணவர்களை விழாச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

**கணிப்பீடு :**

- தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் நோக்கத்தைக் கூறுவார்.
- அதற்குத் தேவையான பொருட்களைக் கூறுவார்.
- பாடசாலையில் இடம்பெறும் தைப்பொங்கல் விழாச் செயற்பாடுகளில் பங்குபற்றுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- தைப்பொங்கற் பண்டிகையினை வீட்டிலும், பாடசாலையிலும் கொண்டாடுதல்.
- தைப்பொங்கல் மூலம் - சூரியனுக்கு நன்றி செலுத்துதல்.
- தைப்பொங்கற் பண்டிகை நாளில் உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்துண்ணல்



**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **பட்டிப்பொங்கல்**

**கற்றற் பேறுகள் :**

- சைவசமயத்தவர்கள் கொண்டாடும் சமயப் பண்டிகைகளை அறிந்து கூறுவார்.
- பட்டிப்பொங்கல் பற்றி அறிந்து கூறுவார்.
- பட்டிப்பொங்கல் கொண்டாடுவதன் நோக்கத்தை அறிந்து கூறுவார்.

**வளங்கள் :**

- பட்டிப்பொங்கல் காட்சிகளைக் கொண்ட இறுவட்டுக்கள்
- காட்சிப்படம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- சைவசமயத்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது என்பதைக் கூறுக.
- பட்டிப்பொங்கல் கொண்டாடுவதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துக.

**செயற்பாடு 2:**

- அண்மையில் உள்ள சூழலில் நடைபெறுகின்ற பட்டிப்பொங்கல் நிகழ்வுக்கு மாணவர்களை அழைத்துச்சென்று நேரடி அனுபவத்தை வழங்குக.

**கணிப்பீடு :**

- பட்டிப்பொங்கல் கொண்டாடுவதன் நோக்கத்தைக் கூறுவார்.
- பட்டிப்பொங்கல் கொண்டாடும் காட்சியை வரைந்து காட்டுவார்.
- பசு, எருது போன்றவற்றிற்கு கருணை காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- பட்டிப்பொங்கற் பண்டிகையினை மதித்தல்.
- பட்டிப்பொங்கல் மூலம்- எருதுகளுக்கு நன்றி செலுத்துதல்.



**தொனிப்பொருள்: சமய நம்பிக்கையும் வழிபாடும்**

**தேர்ச்சி** : 3.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **தினசரி காலைப் பிரார்த்தனை**

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையில் மேற்கொள்ள வேண்டிய நாளாந்தக் கருமங்களை அறிந்து கூறுவார்.
- தினசரி காலைப் பிரார்த்தனைகளில் விருப்புடன் பங்குபற்றுவார்.
- காலைப் பிரார்த்தனைகளில் பங்குபற்றுவதன் மூலம் நற்பண்புகளைக் கடைப்பிடிப்பார்.
- திருமுறைப் பாடல்களை மனனம் செய்து பாடுவார்.
- அமைதி பேணி, இறைசிந்தனையில் ஈடுபடுவார்.

**வளங்கள்** :

- நாளாந்தச் சமயக் கடமைகளைக் காட்டும் படங்கள்
- திருமுறைப் பாடல்கள் கொண்ட (தேவாரம், பெரியபுராணம்) இறுவட்டுக்கள்
- ஒலிப்பதிவு நாடாக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1** :
- பாடசாலையில் நடைபெறும் நாளாந்தச் சமயக் கடமைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- பாடசாலையில் காலைப் பிரார்த்தனையில் விருப்புடனும், அமைதியுடனும், பங்குபற்ற வழிப்படுத்துக.
- திருமுறைப் பாடல்களை மனனம் செய்து பக்தியுடன் பாட வழிப்படுத்துக.

**செயற்பாடு 2** :
- நற்சிந்தனைகளைக் கேட்கச் செய்வதுடன் அதில் கூறப்படும் நற்பண்புகளைத் தெளிவுபடுத்துக.

**கணிப்பீடு** :
- பாடசாலையில் காலைப் பிரார்த்தனைகளில் பக்தியுடன் பங்குபற்றுவார்.
- காலைப் பிரார்த்தனையில் சொல்லப்பட்ட நற்சிந்தனைகளில் தாம் விளங்கிக் கொண்டதைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- காலைப பிரார்த்தனையில் செவிமடுக்கின்ற நற்பண்புகளைக் கடைப்பிடித்தல்.
- திருமுறைப் பாடல்களைச் சமய நிகழ்வுகளில் பக்தியுடன் பாடுதல்
- அமைதி, ஒழுங்கு போன்றவற்றைக் கடைப்பிடித்தல்.

**தொனிப்பொருள்: தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும்**

**தேர்ச்சி** : 4.0 தோத்திரப் பாடல்களையும் அறநெறி உணர்த்தும் பாடல்களையும் பாடுவார்.

**உள்ளடக்கம்** : **சைவத் திருமுறைகள்**

**கற்றற் பேறுகள் :**

- திருமுறைகளில் தேவாரமும் பெரியபுராணமும் அடங்கும் என்பதனை அறிந்துகொள்வார்.
- தேவாரம், பெரியபுராணம் என்பவற்றை இறைபக்தியுடன் பாடுவார்.
- தேவாரங்களைப் பாடிய நாயன்மார் மூவரையும் கூறுவார்.
- பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார் சுவாமிகள் என்பதனை அறிந்து கூறுவார்.
- திருமுறைகளைப் பாட முன்பும் பாடிய பின்பும் **'திருச்சிற்றம்பலம்'** என்று கூறுவார்.
- திருறைப் பாடல்களைப் பாடுகின்றபோது உரிய நிலையில் நிற்பார்.

**வளங்கள்** :

- திருமுறைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள்.
- ஒலிப்பதிவுக் கருவி
- பாடநூல்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :
- திருமுறைகளில் தேவாரமும் பெரியபுராணமும் அடங்கும் என்பதைக் கூறுக.
- அவற்றைப் பாட முன்பும் பாடிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" என்று பக்தியுடன் சொல்வதற்கு வழிப்படுத்துக.
- திருமுறைகளைப் பாடும்போது கைகூப்பி நிற்கவேண்டிய நிலையினை அனுசரிக்க வழிப்படுத்துக.
  (எழுந்து அமைதியாக நின்று நெஞ்சிற்கு நேராகக் கைகளைக் கூப்பி இறைபக்தியுடன் பாடுதல்)

**செயற்பாடு 2** :
- பாடநூலில் தரப்பட்டுள்ள திருமுறைப்பாடல்களைத் தெளிவாக உச்சரித்துப் பண்ணுடன் பாடிக்காட்டுக.
- மாணவர்கள் தனியாகவும் குழுவாகவும் திருமுறைப்பாடல்களைப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பாடல் வரிகளைத் தெளிவாக உச்சரித்துப் பாடுவதற்குப் பயிற்றுவிக்குக.

**செயற்பாடு 3** :
- தேவார, புராணங்களின் பொருளினை மாணவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடியவாறு இலகுவான முறையில் வழிப்படுத்துக.
- குறித்த திருமுறைப் பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும், பாடியவர் பெயரையும் மாணவர்களுடன் கலந்துரையாடி அறியச் செய்க.

**கணிப்பீடு** :
- திருமுறைப் பாடல்களைப் பாடும்போது உரிய நிலையில் நின்று பக்தியுடன் பாடுவார்.
- தேவாரங்களையும். பெரியபுராணத்தையும் பாடிய நாயன்மார்களின் பெயர்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- வீட்டிலும், பாடசாலையிலும் பிரார்த்தனையின்போது திருமுறைப் பாடல்களைப் பக்தியுடன் பாடுதல்

- திருமுறையைப் பாட முன்பும், பாடிய பின்பும் **'திருச்சிற்றம்பலம்'** கூறுதல்

**தொனிப்பொருள்: தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும்**

**தேர்ச்சி** : 4.0 தோத்திரப் பாடல்களையும் அறநெறி உணர்த்தும் பாடல்களையும் பாடுவார்.

**உள்ளடக்கம்** : **ஆத்திசூடி**

**கற்றற் பேறுகள் :**

- ஆத்திசூடியை பாடியவர் ஔவையார் என்பதனை அறிந்து கூறுவார்.
- பாடநூலில் தரப்பட்ட ஆத்திசூடிப் பாடல் வரிகளை மனனம் செய்து பாடுவார்.
- ஆத்திசூடிப் பாடலின் பொருளை அறிந்து அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்.

**வளங்கள் :**

- ஆத்திசூடிப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் மற்றும் ஒலிப்பதிவு நாடாக்கள்
- ஆத்திசூடிக் கதைகள் படத்துடன் கூடிய இறுவட்டுக்கள்
- ஆத்திசூடிப் பாடல் வரிகள் எழுதப்பட்ட அட்டை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :
- ஆத்திசூடிப் பாடல்களை இயற்றியவர் ஔவையார் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.
- பாடநூலில் தரப்பட்ட ஆத்திசூடிப் பாடல் வரிகளைச் சரியாகவும் தெளிவாகவும் உச்சரித்துக் கூறுவதுடன் மாணவர்களையும் அதற்கேற்ப வழிப்படுத்துக.
- ஆத்திசூடிப் பாடல் வரிகளின் கருத்தினைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்தி மாணவர்களையும் பொருளறிந்து கூறுவதற்கு வழிப்படுத்துக.

**செயற்பாடு 2** :
- ஆத்திசூடிப் பாடல் உணர்த்தும் கதைகளை மாணவர்களுடன் இலகுவான நடையில் கலந்துரையாடுக.
- பாடநூலில் தரப்பட்ட ஆத்திசூடி வரிகளை இலகுவான ஓசைநயத்துடன் பாடிக்காட்டுவதுடன் மாணவர்களையும் பாட வழிப்படுத்துக.
- ஆத்திசூடி கூறும் அறிவுரைகளுக்கேற்ப மாணவர்கள் பாடசாலையிலும் தமது வீட்டிலும் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்துக.

**கணிப்பீடு** :
- மாணவர்கள் மனனம் செய்த ஆத்திசூடி வரிகளைத் தெளிவாகக் கூறுவதுடன் அது உணர்த்தும் பொருளையும் கூறுவார்.
- ஆத்திசூடிப் பாடல் வரிகளை இசையுடன் பாடுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- ஆத்திசூடி கூறும் கருத்துக்களை விளங்கி அதன்படி நடத்தல்

**தொனிப்பொருள் : சமயக் கதைகள்**

**தேர்ச்சி** : 5.0 கதைகள் ஊடாகச் சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார்.

**உள்ளடக்கம் : தாயும் ஆனார்**

**கற்றற் பேறுகள் :**

- **தாயும் ஆனார்** கதையைப் பக்தியுடன் கூறுவார்.
- இறைவனின் பல்வேறு இயல்புகளையும் கூறுவார். (அன்பே வடிவானவர், எல்லா உயிர்களையும் காப்பவர் போன்றன)
- இறைவனின் கருணையை உணர்ந்து வணங்குவார்.

**வளங்கள் :**

- **தாயும் ஆனார்** என்ற கதை எழுதப்பட்ட படத்துடன் கூடிய அட்டை
- சிவபெருமானின் திருவுருவப் படம்
- கட்புல சாதனங்கள்
- இறுவட்டுக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1 :**

- இக்கதையை மெய்ப்பாடுகளுடன் கூறுவதுடன் மாணவரை அவதானமாகச் செவிமடுக்கவும், இரசிக்கவும் வழிப்படுத்துக.
  **(ஒரு காடு - அக்காட்டில் ஒரு பன்றி - அதற்குப் பல குட்டிகள், தாய் இரைதேடப் போதல், தாய்ப்பன்றியை இறத்தல், குட்டிகள் பசியால் வருந்துதல், அவை தாயின்றித் தவித்தல், இறைவன் இதை அவதானித்தல் தானே தாய்ப் பன்றியாக வருதல், பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தல் குட்டிகள் மகிழ்தல்)**

**செயற்பாடு 2 :**

- இக்கதையை மாணவர்கள் பக்தியுடன் கூற வழிப்படுத்துக.
- இக்கதையின் மூலம் இறைவன் எல்லா உயிர்கள் மீதும் அன்பு உள்ளவர், உயிர்களைக் காத்து அருள் செய்பவர் என்பதைக் கூறுக.
- இறைவனை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் வழிபாடு செய்ய மாணவர்களை ஈடுபடுத்துக.

**செயற்பாடு 3 :**

- இக்கதையை மாணவர்கள் தம்மால் இயன்ற அளவில் சித்திரமாக வரைவதற்கு உதவுக.

**கணிப்பீடு :**

- கதையைப் பிழையின்றி பக்தியோடு கூறுவார்.
- இறைவனின் இயல்புகளைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- பிற உயிரினங்கள் மீது கருணை காட்டுதல்
- இறைவனை நாள்தோறும் நம்பிக்கையுடன் வழிபடுதல்.

**தொனிப்பொருள்: சமயக் கதைகள்**

**தேர்ச்சி** : 5.0 கதைகள் ஊடாகச் சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார்.

**உள்ளடக்கம்** : **பெற்றோரே உலகம் (மாம்பழக் கதை)**

**கற்றற் பேறுகள் :**

- இக்கதையைச் சுயமாகக் கூறுவார்.
- இக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.
- நாள்தோறும் பெற்றோர்களை வணங்குவார்.

**வளங்கள்** :
- கதை எழுதப்பட்ட காட்சிப் படம்
- இறுவட்டு

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1 :
- இக்கதையை முழுமையாக மெய்ப்பாடுகளுடன் கூறுக.
- மாணவர் கதையை அவதானமாகச் செவிமடுக்கவும், இரசிக்கவும் வழிப்படுத்துக. **(சிவனும் உமையும் பிள்ளையார், முருகனுடன் திருக்கைலாய மலையில் வீற்றிருத்தல், அப்போது நாரத முனிவர் மாம்பழம் ஒன்றைக் கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தல், இருப்பது ஒரு மாம்பழம் மட்டுமே. இதை யாருக்குக் கொடுப்பது? என்று சிவபெருமான் சிந்தித்தல், உலகை முதலில் சுற்றி வருபவருக்கே பழம் கிடைக்கும் என உரைத்தல், இதைக் கேட்ட முருகப்பெருமான் மயில் மீது உலகைச் சுற்றி வரப் புறப்படுதல், பிள்ளையார் "அம்மை, அப்பரே உலகம்" என எண்ணி அவர்களை வலம் வருதல், மாம்பழத்தைப் பெற்றுக்கொள்ளுதல்)**
- இக்கதையின் மூலம் தாய், தந்தையரே எமது உலகம் என்பதை மாணவருக்குத் தெளிவுபடுத்துக.

செயற்பாடு 2 :
- இக்கதையை முறைப்படி கூற வழிப்படுத்துக.
- சிவன், உமை, பிள்ளையார், முருகன் முதலிய பாத்திரங்களேற்று இக்கதையை மாணவர்கள் நடித்துக்காட்ட வழிநடத்துக.
- இக்கதையின் மூலம் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முதுமொழியை விளங்கி தாய், தந்தையரைப் போற்றும் பண்பினைக் கடைப்பிடிக்கப் பழக்குக.

**கணிப்பீடு :**

- இக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்
- தாய் தந்தையரே எமது உலகம் என்பதைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- தாய், தந்தையரைப் போற்றும் பண்பினைக் கடைப்பிடித்தல்
- தாய், தந்தையரைப் போற்றவேண்டியதன் அவசியத்தை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறல்

**தொனிப்பொருள்: இறை அடியார்கள்**

**தேர்ச்சி** : 6.0 நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.

**உள்ளடக்கம் : திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதை**

**கற்றற் பேறுகள் :**

- கதையை இரசனையுடன் கூறுவார்.
- அக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக்காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள் :**

- ஞானசம்பந்தரின் திருவுருவப் படம்
- கதையைக் குறிக்கும் காட்சி அட்டை
- இறுவட்டு
- பக்கப்புரட்டி (படங்கள்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு 1 :
- திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதையை முழுமையாக மெய்ப்பாடுகளுடன் கூறி மாணவர்களை அவதானமாகச் செவிமடுக்கவும், இரசிக்கவும் வழிநடாத்துக. (சிவபாதவிருதையர், சீர்காழி என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவர் தோணியப்பர் கோயிலுக்குச் செல்லுதல், குழந்தை 'நானும் வருகிறேன்" என அடம்பிடித்தல், தந்தையார் குழந்தையைக் கூட்டிச்செல்லல், குளக்கரையில் இருத்தி விட்டுக் குளத்தில் இறங்கி நீராடுதல், தலை நீரில் மறைந்தபோது (மூச்சை இழுத்து மூழ்கி நீராடிய போது) தந்தையைக் காணவில்லை என்று குழந்தை பதற்றமடைதல், குழந்தை "அம்மா, அப்பா....." என்று அழுதல், சிவன் உமையம்மையுடன் தோன்றுதல் பொற்கிண்ணத்தில் குழந்தைக்குப் பாலூட்டுதல், ஞானப்பால் கொடுத்தபின் சிவனும் உமையும் மறைதல், தந்தையார் சிறிது நேரத்தில் குளத்தில் இருந்து வெளியே வருதல், குழந்தையின் வாயில் பால் வழிந்திருப்பதைக் காணுதல், "யாருடைய எச்சிற் பாலைக் குடித்தாய்" எனக் குழந்தையை அதட்டல், குழந்தை ஆகாயத்தைக் காட்டி "தோடுடைய செவியன்" எனப்பாடுதல்)

செயற்பாடு 2 :
- சிவபாதவிருதையர், சிவன், உமையம்மை, ஞானசம்பந்தர் ஆகியோரின் பாத்திரங்களை ஏற்று இக்கதையை மாணவர்கள் நடித்துக் காட்ட வழிப்படுத்துக.
- இக்கதையை மாணவர்கள் சுயமாகக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- எல்லா உயிர்களையும் படைத்து, காத்து, அருள் செய்பவன் இறைவனே என்றும், அன்பே வடிவான இறைவனை வணங்குவதால் துன்பங்கள் நீங்கி,இறை அருள் கிடைக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ள வழிப்படுத்துக.

**கணிப்பீடு :**

- சிறு வினாக்களுக்கு விடை கூறுவார். (மாணவருக்குப் பொருத்தமான வினாக்கள்)
- பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- மெய்யன்புடன் இறைவனை வழிபட்டால் இறைவன் அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன்

பக்தி செலுத்துதல்

**தொனிப்பொருள்** : **சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **கனம் பண்ணுவோம்**

**கற்றற் பேறுகள்** :
- சைவ நற்பண்புகளில் ஒன்றான கனம் பண்ணுதலைக் கடைப்பிடிப்பார்.
- வீட்டில் தாய், தந்தை மற்றும் வயதில் மூத்தோரைக் கனம் பண்ணுவார்.
- தினமும் அவர்களைப் பாதங்களில் விழுந்து வணங்குவார்.
- பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களைக் கனம் பண்ணுவார்.
- அதிபர், ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்போது அமைதியாக எழுந்துநின்று பணிவுடன் வணக்கம் கூறுவார்.
- பெற்றோர், ஆசிரியர் சொற்கேட்டு நடப்பார்.

**வளங்கள்** :
- பெற்றோரை, மூத்தோரை வணங்கும் படம்
- வகுப்பறைக்கு ஆசிரியர் / அதிபர் வரும்போது மாணவர்கள் எழுந்து நின்று (கைகூப்பியவாறு) வணக்கம் கூறும் படம்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1 :
- கனம் பண்ணுதல் என்றால் என்ன? என்பது பற்றி இலகுவாக மாணவர்களுக்கு எடுத்துக்கூறுக.

  **எடுத்துக் காட்டு** - **மரியாதை செலுத்துதல் (வணங்குதல்)**
  - **புத்திமதிகளைக் கேட்டு நடத்தல்**
  - **பெற்றோர் பேசும் பொழுது அமைதியாக இருத்தல்**
  - **பெற்றோர் சொல்லும் வேலைகளைப் பணிவோடு செய்தல்**
- பெற்றோர், பெரியோர், வயதில் மூத்தோருக்கு மரியாதை செலுத்துவது சிறந்த பண்பாகும் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- பெற்றோரதும் ஆசிரியரதும் சொற்கேட்டு நடக்க வழிப்படுத்துக.

செயற்பாடு 2 :
- மாணவர்களைக் கொண்டு கீழ்வரும் விடயங்களைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

  **எடுத்துக் காட்டு** - **பெற்றோரை வீழ்ந்து வணங்குதல்**
  - **பெற்றோர் வரும்போது எழுந்து மரியாதை செய்தல்**
  - **வகுப்பறைக்கு ஆசிரியர்கள் / அதிபர் வரும்போது மாணவர்கள்எழுந்து நின்று வணக்கம் கூறுதல்**
  - **அவர்களுக்கு உதவுதல்**
  - **அமைதியாக அவர்களுடன் உரையாடுதல்**

செயற்பாடு 3 :
- பெற்றோர் தினம், பரிசளிப்பு விழா, கலைவிழா, ஆசிரியர் தினம் இடம் பெறும்போது பெற்றேர், அதிபர், ஆசிரியர்களை விழுந்து வணங்க வழிப்படுத்துக.

**கணிப்பீடு** :
- கனம் பண்ணும் முறைகளைச் செய்து காட்டுவார்.
- ஆசிரியர், அதிபர் கூறும் கருத்துகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- பெற்றோர், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும், விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் : ஏழைகளுக்கு உதவுவோம்**

**கற்றற் பேறுகள் :**

- ஏழைகளிடம் அன்புடன் நடந்துகொள்வார்.
- ஏழைகளுக்கு இரங்குவார்.
- ஏழைகளுக்குத் தம்மால் இயன்றவற்றைக் கொடுப்பார்.
- இதன் மூலம் இறைவனின் அன்பைப் பெறலாம் என்பதனை உணர்ந்து செயற்படுவார்.

**வளங்கள் :**

- ஏழைகளுக்கு உதவும் காட்சிகளைக் காட்டும் படங்கள்
- இதனை வலியுறுத்தும் கதைகள் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்கள்
- காணொளிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

செயற்பாடு 1 :

- ஏழைகளுடன் எவ்வாறு அன்பு காட்டவேண்டும் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- ஏழைகளுடன் அன்புடன் பேசுவதற்கு வழிகாட்டுக.
- பெற்றோருடன் இணைந்து ஏழைகளுக்கு உணவு, உடை ஆகியவற்றை வழங்க வேண்டும் எனவும் அவர்களுக்கு உதவுவதன் மூலம் இறைவனின் அன்பைப் பெறலாம் என்பதையும் மாணவர் உணர்ந்து செயற்பட வழிப்படுத்துக.

செயற்பாடு 2 :

- ஏழைகளுக்கு உதவும் காட்சிகளைக் காட்டும் படங்களைக் காட்சிப்படுத்தி, மாணவர் தம் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக. .
- கதைகள் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள், காணொளிகள் மூலம் பெற்ற அனுபவத்தை செயற்படுத்துவதில் மாணவர்களை ஈடுபடுத்துக.

**கணிப்பீடு :**

- ஏழைகளுக்கு எவ்வாறு அன்பு காட்ட வேண்டும் என்பதைக் கூறுவார்.
- மாணவர்கள் ஏழைகளுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.

நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்

- பெற்றோருடன் இணைந்து ஏழைகளுக்கு உணவு, உடை ஆகியவற்றை வழங்குதல்

- ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல்

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **சுத்தம் பேணுவோம்**

**கற்றற் பேறுகள்** :
- தூய்மையான இடத்தையே கடவுள் விரும்புவார் என்பதனை உணர்ந்து செயற்படுவார்.
- வீட்டில் தம் சுத்தத்தைப் பேணும் விதத்தினைக் கூறுவார்.
- தமது உடல், உடை, காலணி என்பவற்றைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- கால்களைக் கழுவி, கோயிலுக்குச் செல்வார்.
- அர்ச்சனைக்குரிய பொருட்களை நீர் தெளித்து சுத்தப்படுத்திக் கொண்டு செல்வார்.
- ஆலயத்தைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- வகுப்பறையில் தம்மால் இயன்றளவு சுத்தம் செய்யும் செயல்களில் ஈடுபடுவார்.
- குப்பைகளை உரிய இடங்களில் போடுவார்.

**வளங்கள்** :
- சுத்தம் செய்யும் படங்கள் (வீடு / வகுப்பறை)
- கோயில் மண்டபத்தைக் கூட்டுதல் / குப்பைகளை அகற்றும் படம்
- அர்ச்சனைக்குரிய பொருட்களை நீர் தெளித்துச் சுத்தப்படுத்தும் படம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1** :
- சுத்தம் செய்யும் காட்சிகள் கொண்ட படத்தினை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- காணொளிகளைக் காண்பிப்பதற்கான வசதிகள் வகுப்பறையில் இருப்பின் அவற்றினையும் காட்டுவதன் மூலம் மாணவர் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- வீட்டில் தம் சுத்தத்தினைப் பேணும் விதத்தினைப் பற்றியும் தமது உடல், உடை, காலணி என்பவற்றைச் சுத்தமாக வைத்திருக்கும் விதத்தினையும் காட்டி மாணவர்களைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு 2** :
- ஆலயத்தைச் சுத்தம் செய்யும் முறையினைச் செயற்பாட்டினூடாக செய்து காட்டுவதற்கு அண்மையில் உள்ள ஆலயத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்க. தம்மால் இயன்றளவு ஆலயத்தைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபடுத்துக.
- ஆலயத்துக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும்போது அர்ச்சனைக்குரிய பொருட்களைக் கழுவிச் சுத்தம் செய்யும் முறையினைச் செயற்படுத்திக் காட்டுக.

**செயற்பாடு 3** :
- வகுப்பறையில் தினமும் தம்மால் இயன்றளவு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
- குப்பைகளை உரிய இடத்தில் போடுவதற்கு வழிப்படுத்துக.

**கணிப்பீடு** :
- மாணவர்கள் தமது உடல், உடை, காலணி ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- வகுப்பறையில் உரிய முறையில் குப்பைகளை அகற்றுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**
- தினமும் சுத்தம் பேணுதல்
- வீட்டையும் பாடசாலையையும் வகுப்பறையையும் தம்மால் இயன்றளவு சுத்தமாக வைத்திருத்தல்

- இயன்றளவு ஆலயத்தைச் சுத்தம் செய்வதற்கு உதவுதல்

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப் பிடிப்பார்.

**உள்ளடக்கம் : உயிர்களிடம் இரக்கம் காட்டுவோம்**

**கற்றற் பேறுகள் :**

- எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவார்.
- தமக்கு நன்மை செய்யும் பிராணிகளைக் குறிப்பிடுவார்.
- அவற்றிற்கு உணவும் நீரும் வழங்குவார்.
- கடவுள் எல்லா உயிர்களிலும் இருக்கின்றார் என்பதனை உணர்ந்து அவற்றிற்கு உதவுவார்.

**வளங்கள் :**

- மாணவர் பிராணிகளிடம் அன்பு காட்டுவது தொடர்பான காட்சிப்படங்கள்
- கதைப்படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

செயற்பாடு 1 :

- வீட்டில் வளர்க்கும் பிராணிகள் பற்றிக் கலந்துரையாடுக.
- வீட்டில் வளர்க்கும் பிராணிகளுக்கு எவ்வாறு அன்பு செலுத்துகின்றார்கள் என்பதைக் கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பிராணிகளால் எமக்குக் கிடைக்கும் நன்மைகளைத் தெளிவுபடுத்துக.

செயற்பாடு 2 :

- மாணவர் மனதில் பிராணிகள் மீது இரக்கம் காட்ட வேண்டும் என்ற உணர்வைப் பதிப்பதற்குப் படங்களைக் காட்சிப்படுத்திக் கதைகள் கூறுதல், மற்றும் நடித்துக் காட்டுதல் போன்ற செயற்பாடுகளை வகுப்பறையில் செயற்படுத்துக.

**கணிப்பீடு :**

- பிராணிகள் மீது தாம் இரக்கம் காட்டிய சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- பிராணிகள் மீது இரக்கம் காட்டும் சந்தர்ப்பங்களை நடித்துக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- பிராணிகள் மீது அன்பு செலுத்தி அவற்றிற்கு உணவும் நீரும் தருதல்.
- அவற்றிற்குத் துன்பம் செய்யாதிருத்தல்.

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்கலாறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **வீட்டில் ஒற்றுமையாகச் செயற்படுவோம்**

**கற்றற் பேறுகள் :**

- வீட்டில் ஒற்றுமையாய் இருப்பதன் அவசியத்தை அறிந்து கூறுவார்.
- தாம் வீட்டில் ஒற்றுமையாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- ஒற்றுமையாகச் செயற்பட்டதனால் பெற்றுக் கொண்ட நன்மைகளைப் பற்றிக் கூறுவார்.
- வீட்டில் தன் பெற்றோருடனும், சகோதரர்களுடனும் நல்லுறவைப் பேணும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வார்.
- சகோதரர்களுடன் ஒற்றுமையாக விட்டுக்கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியாக வாழமுடியும் என்பதை உணர்ந்து செயற்படுவார்.
- சக மாணவர்களுடன் ஒன்றுபட்டுச் செயற்படுவார்.
- ஒற்றுமையுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதனை உணர்ந்து செயற்படுவார்.

**வளங்கள் :**

- வீட்டில் (குடும்ப அங்கத்தவர்களுடன்) சகலரும் இணைந்து செயற்படும் விதத்தினை வெளிப்படுத்தும் காட்சிப்படம்
- ஒற்றுமையை வெளிப்படுத்தும் கதைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1 :

- ஒற்றுமையாகச் செயற்படுவதனை அடிப்படையாகக் கொண்ட கதை ஒன்றினைக் கூறுவதன் மூலம் கலந்துரையாடலை மேற்கொள்க.
- மாணவர்கள் வீட்டில் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களைக் கூறுவதற்கு வழிப்படுத்துக்.

செயற்பாடு 2 :

- சக மாணவர்களுடன் ஒன்றுபட்டுச் செயற்படும் செயற்பாடுகள் சிலவற்றை மாணவரிடம் கேட்டறிக.
- ஒற்றுமையுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதனை, சிறு நாடகம் மூலம் நடித்துக் காட்டுவதற்கு வழிகாட்டுக.

**கணிப்பீடு** :

- ஒன்றுபட்டுச் செயற்படும் சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் கூறுவார்.
- ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதத்தில் நடித்துக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- வீட்டிலும் பாடசாலையிலும் ஒற்றுமையாகச் செயற்படுதல்.

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்கறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் : உண்மை பேசுவோம்**

**கற்றற் பேறுகள் :**

- எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசுவார்.
- எல்லா விடயங்களையும் தாய், தந்தையரிடம் ஒழிவு மறைவின்றிக் கூறுவார்.
- உண்மை பேசுவதன் மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகள் பற்றிக் கூறுவார்.
- பாடசாலையில் சகல செயற்பாடுகளின் போதும் உண்மை பேசுவார்.
- வகுப்பறையில் ஆசிரியர்களுடனும், சகபாடிகளுடனும் உண்மையுடன் நடந்து கொள்வார்.
- உண்மை பேசுவதனால் வெற்றி பெறலாம் என்பதனை உணர்ந்து செயற்படுவார்.

**வளங்கள்** :
- மகாத்மா காந்தியின் படம்
- அரிச்சந்திரனின் படம்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1 :**

- மகாத்மா காந்தி, அரிச்சந்திரன் ஆகிய இருவரின் படங்களையும் காட்சிப்படுத்தி அவர்களை அறிமுகப்படுத்துக.
- இவர்கள் இருவரும் உண்மை பேசி உயர்வடைந்தவர்கள் என்பதை மாணவருக்குத் தெளிவுபடுத்துக.
- எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசுதல் அவசியம் என்பதனை வலியுறுத்தும் வகையில் பாட நூலில் உள்ள கதையைக் கூறுக.

**செயற்பாடு 2 :**

- சகல விடயங்களையம் பெற்றோரிடம் ஒழிவு மறைவின்றிக் கூறுவதற்கு வழிப்படுத்துக.
- உண்மை பேசுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றி அறிவதற்கு வழிப்படுத்துக.
- பாடசாலையிலும் வகுப்பறையிலும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் உண்மையைப் பேசுவதற்கு வழிப்படுத்துக.
- உண்மை பேசும் மாணவர்களை கை தட்டி உற்சாகப்படுத்துக.

**செயற்பாடு 3 :**

- கீழ்த் தரப்பட்டுள்ள பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.

**உண்மை என்றும் பேசிடுவோம் உத்தமனாய் வாழ்ந்திடுவோம்**
**உண்மை பேசி உயர்ந்தவரை உலகம் என்றும் போற்றிடுமே !**
**ஒழிவு மறைவு இன்றியே உள்ளதையே உரைத்திடுவோம்**
**இனிய வாழ்வு வாழ்ந்திடலாம் இறையருளைப் பெற்றிடலாம் !**

**கணிப்பீடு :**

- வகுப்பறையில் எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசுவார்.
- உண்மை பேசுவதனால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- வீட்டிலும் பாடசாலையிலும் எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசுவதைக் கடைப்பிடித்தல்

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைடிப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **பகிர்ந்து உண்போம்**

**கற்றற் பேறுகள் :**

- பகிர்ந்து உண்ணல் நற்பண்புகளில் ஒன்று என்பதனை உணர்ந்து செயற்படுவார்.
- பிறருக்குக் கொடுத்து உண்ணும் பழக்கத்தினைக் கடைப்பிடித்து செயற்படுவார்.
- தமக்குக் கிடைக்கும் சிறிதளவு உணவையும் பகிர்ந்து உண்பார்.
- விசேட தினங்களில் பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் பகிர்ந்து உண்டு மகிழும் பழக்கத்தினைக் கடைபிடிப்பார்.
- சக மாணவர்களுடன் பகிர்ந்து உண்டு ஒற்றுமையாகச் செயற்படுவார்.

**வளங்கள் :**

- பகிர்ந்து உண்பதனைக் காட்டும் படங்கள்
- பகிர்ந்து உண்பதனை வெளிப்படுத்தும் கதை அட்டைகள்

**கற்றல - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1 :**

- பகிர்ந்து உண்பதனை வெளிப்படுத்தும் செயற்பாடொன்றினை முன்வைப்பதன் மூலம் கலந்துரையாடலைத் தொடருக.
- பகிர்ந்து உண்ணுதல் சைவசமயம் சார்ந்த வாழ்க்கைப் பண்புகளில் ஒன்றாகும் என்பதனைத் தெளிவுபடுத்துக.

**செயற்பாடு 2 :**

- வகுப்பறையில் சக மாணவர்களுடன் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன் விசேட தினங்களில் உறவினர்களுடன் பகிர்ந்து உண்ணும் பண்பினை வளர்ப்பதற்கு வழிப்படுத்துக.

**கணிப்பீடு :**

- வகுப்பறையில் உணவு உண்ணும் வேளையில் பகிர்ந்துண்டு மகிழ்வார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- உண்ணும் போது மற்றையவர்களுக்கும் கொடுத்து உண்ணுதல்
- தைப்பொங்கற் பண்டிகை நாளில் உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்துண்ணல்

**தொனிப்பொருள்: சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்**

**தேர்ச்சி** : 7.0 சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** : **சைவப் பண்புகளைக் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வோம்**

**கற்றற் பேறுகள் :**
- சைவப் பிள்ளையாக "நல்ல பிள்ளைகள்" தினததை மற்றவர்களுடன் இணைந்து கொண்டடுவார்.
- ஏனையோருக்கு உதவி செய்து பெறுமதியான செயல்களில் ஈடுபடுவார்.
- நற்குணங்களை வெளிப்படுத்தும் வகையில் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**வளங்கள் :** • **"விழுமியம் என்னும் மரத்தின் உச்சிக்கு ஏறுவோம்"** என்னும் செயற்பாட்டிற்கான உபகரணங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1 : **"நல்ல பிள்ளை" தினம்**

- சகல சிறார்களுக்கும் வருடத்தில் ஒரு பாடசாலைத் தினத்தை **"நல்ல பிள்ளை"** தினம் என்ற வகையில் ஒதுக்கித் தருக.
  (வருட ஆரம்பத்தில் பெற்றோர் தினத்தில் திருவுளச் சீட்டு முறையின் மூலம் வருடம் முழுவதிலும் உள்ள பாடசாலைத் தினங்கள் வியாபித்துச் செல்லும் வகையில் வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவர்களுக்கும் தினமொன்றை வழங்குவது ஆசிரியர் பொறுப்பாகும்.)
- நல்ல பிள்ளை என்னும் தினத்தில் பிள்ளை தொடர்பாகப் பெற்றோர், மூத்தோர் அயலவர், மற்றும் நெருக்கமானவர்கள் எவ்வாறு செயல் புரிய வேண்டும் என்பது குறித்து கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொள்வது தொடர்பாகப் பெற்றோருக்கு அறிவூட்டம் செய்க.
- முன்னைய தினத்தில் பிள்ளையை ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுதல், உரிய தினத்தில் காலை வேளையில் விசேட சமயப் பிரார்த்தனையில் ஈடுபடுத்தல் மற்றும் பிள்ளை மிகவும் விரும்பி உண்ணும் ஆகாரத்தைத் தயாரித்துத் தருதல் சிறப்பானதாகும்.
  (இங்கு பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்ற கருத்தில் இவை கூறப்படவில்லை என்பதைக் கருத்திற் கொள்ளவும்.)

**வளங்கள்** : • **விழுமியம் என்னும் மரத்தின் உச்சிக்கு ஏறுவோம்"** என்னும் செயற்பாட்டிற்கான உபகரணங்கள்

**நல்ல பிள்ளை எனும் மாணவனின் வகைகூறல்**

- தாமாகவே பாடசாலைக்குச் செல்வதற்கு ஆயத்தமாகுதல் மற்றும் வழிபாட்டில் ஈடுபடுதல்.
- எந்தக் காரணத்தினாலும் கோபம் கொள்ளாதிருத்தல்
- மற்றவர் செய்யும் பிழைகளைப் பொறுத்தல்.
- மகிழ்வுடன் சிரித்தபடி இருத்தல்.
- இயன்றவாறு எல்லா வேளைகளிலும் ஏனையோருக்கு மகிழ்வுடன் உதவுதல்.
- பாடசாலையில் கற்றல் செயற்பாடுகளுடன் ஏனைய சகல வேலைகளையும் அவதானத்துடனும் விருப்பத்துடனும் செய்தல்
- வகுப்பறையில் சகலருக்கும் முன்மாதிரியாக நடத்தல்.
- சமயத்தில் கற்பிக்கப்படுகின்ற சகல சிறந்த குணங்களையும் அன்றைய தினத்தில் வெளிப்படுகின்றவாறு நல்ல பிள்ளையாக இருத்தல்

**ஏனைய மாணவர்களின் பொறுப்பு**

- உரிய தினத்தில் நல்ல பிள்ளையாக இருக்கும் நண்பனுக்கு / நண்பிக்கு அந்த நாளில் நல்ல பிள்ளையாக இருப்பதற்குச் சகல விதத்திலும் ஒத்தாசை புரிதல்.
- அவர் முன்னர் தவறுகள் செய்திருப்பின், அவை பற்றிக் கதையாது இருத்தல்.
- தமது நண்பன் இன்று நல்ல பிள்ளை என்பதைக் கூறிக் கூறிப் பாராட்டுதல்.
- அவரைக் கோபமடையச் செய்யும் துக்கமடையச்செய்யும் வெட்கமடையச்செய்யும் விதத்தில் செயற்படாதிருத்தல்.
- இயலுமாயின் நண்பனுக்கு வாழ்த்து மடல் ஒன்றைத் தமது கையால் ஆக்கஞ் செய்து வழங்குதல்

**ஆசிரியரின் வகை கூறல்**

- ஒருவருக்கு வருடத்தில் ஒரு முறை மட்டும் வருகின்ற இந்தத் தினம் தொடர்பாக மாணவனின் உள்ளத்தில் மிகப் பெரிய ஆசையைத் தோற்றுவிக்கும் வகையில் சகலரையும் தயார்ப்படுத்தல்
- "நல்ல பிள்ளை" க்கு வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரித்து வழங்குதல்.
- "நல்ல பிள்ளை" க்கும் ஏனைய பிள்ளைகளுக்கும் இச் செயற்பாடு தொடர்பாகச் சிறந்த எண்ணக்கருவை விருத்தி செய்தல்.
- ஏனைய பிள்ளைகள் இச் செயற்பாடு குறித்து உதவவேண்டிய முறைகள் தொடர்பாக ஆயத்தமாகும் மனப்பாங்கைக் கட்டியெழுப்புதல்.
- தாம் "நல்ல பிள்ளை" யைப் பாராட்டுவதுடன் ஏனைய பிள்ளைகளும் அவரைப் பாராட்டுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருதல்

செயற்பாடு 2 : **"நல்லவனாகிய எனது வேலையின் பெறுமதி"**

- சகல மாதங்களிலும் ஏதாயினும் ஒரு திகதியில் பெற்றோரின் உதவியுடன் விசேடமான சிறந்த காரியம் ஒன்றைச் செய்வதற்குச் சிறார்களைத் தூண்டவும்.
- வீட்டில் அவற்றைச் சித்திரமாக வரைவதற்கான ஆலோசனைகளை வழங்கவும்.
  - ( **A**4 அளவிலான தாளொன்றில் அந்நிகழ்வை வரைந்து நிறந்தீட்ட வேண்டும்.)
  - பெற்றோர் / ஆசிரியர் அந்நிகழ்வை எழுதி உரிய மாதத்தைக் குறிப்பிடவும்.
- ஒவ்வொரு மாதமும் இச்சித்திரத்தை ஆசிரியர் பெற்றுக் கொள்ளவும்.
- வகுப்பறையில் ஆசிரியர் அவற்றைக் கோவைப்படுத்திப் பாதுகாப்பாக வைக்கவும்.
- வருட இறுதியில் ஒரு தினத்தைத் தெரிவுசெய்து மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் சித்திரங்களைப் புத்தகமாகத் தயாரிப்பதற்கு ஈடுபடுத்தவும்.
- உறை ஒன்றினுள் அப்புத்தகத்தை வைத்து, மாணவரைத் தமது பெயர் மற்றும் வகுப்பினைக் குறிப்பிடச் செய்யவும்.

செயன்முறை 3 : **விழுமியம் எனும் மரத்தின் உச்சிக்கு ஏறுவோம்**

- முன்னாயத்தம் :
  நமக்கு வெற்றி கிட்டுவது நாம் நற் செயல்களைச் செய்வதனால் மட்டுமேயாகும் என்ற எண்ணத்தை மாணவனில் அழுத்தமாக ஏற்படுத்தி விளையாட்டில் ஈடுபடுத்துக.
  விளையாட்டின் பெயர் - **"விழுமியம் எனும் மரத்தின் உச்சிக்கு ஏறுவோம்"**
- பிள்ளைகள் அன்றன்று செய்கின்ற சிறந்த வேலைகள் மற்றும் நாளாந்தம் அவர்கள் அறியாது செய்கின்ற தவறுகள் ஆகியவை எழுதப்பட்ட அட்டைகள் ( பிள்ளைகளின் எண்ணிக்கைக்குச் சமமான அட்டைகள்) இடப்பட்ட பெட்டியொன்றைத் தயார் செய்யவும். (இங்கு நல்ல செயல்கள் 3/4 பங்கு என்றவாறும் தவறுகள் ¼ பங்கு என்றவாறும் அட்டைகள் அமைந்திருக்க வேண்டும்.
- மீற்றர் கோல் ஒன்றைச் சுண்ணாம்புப் பலகையின் தலைப்பகுதியில் பொருத்தவும்.
- உயரத்தில் கொடியொன்றைப் பொருத்தி அதில் **பண்பிற் சிறந்த பிள்ளை** என எழுதவும்.
- காட்போட் துண்டுகளைக் கொண்டு பிள்ளை உருவொன்றைத் தயாரிக்கவும். சுண்ணாம்புப் பலகையில் ஒட்டக் கூடியவாறு அதன் பின் புறத்தில் களி உருண்டையைப் பொருத்தவும்.
- மீற்றர் கோலின் இவ்விரண்டு செ.மீற்றருக்கு இடையே சுண்ணாம்புப் பலகையில் சிறிய கோடுகளை வரிசையாக வரையவும்.
- செ. மீ 0 மாக இருக்கும் இடத்தில் "ஆரம்பம்" என எழுதி, காட்போட் பிள்ளையை அவ்விடத்தில் வைக்கவும்.

**விளையாடும் முறை**

- தயாரிக்கப்பட்ட பிள்ளையின் உருவத்திற்குப் பெயர் ஒன்றை வைக்குக. (வகுப்பறையில் இல்லாத பிள்ளையொன்றின் பெயர்)
- பெட்டியில் அப்பிள்ளை செய்யும் நல்ல செயல்கள் மற்றும் தவறான செயல்கள் என்பன இருக்கின்றன என்பதை மாணவர்களுக்குக் கூறுக.
- ஒவ்வொரு பிள்ளையையும் அழைத்து அட்டையொன்றை எடுக்கச் செய்க.
- ஆசிரியரின் உதவியுடன் அட்டையில் இருப்பதை வாசிப்பதற்குத் தயார் செய்க.
- அதில் குறிக்கப்பட்டிருப்பது சிறந்த செயலாயின் காட்போட் பிள்ளையை ஒரு படி உயர்த்தி ஒட்டுக.
- தவறான செயல் எழுதப்பட்ட அட்டையை எடுத்திருப்பின் காட்போட் பிள்ளையை ஒரு படி கீழே பதித்து ஒட்டுக.
- இவ்வாறு சகல மாணவர்களையும் பிள்ளையின் உருவை ஒட்டுவதற்கு வழிப்படுத்துக.
- தவறான செயல்கள் எழுதப்பட்ட அட்டைகளை எடுத்த சகல மாணவர்களையும் மீண்டும் அழைக்குக.
- அவர்கள் சிறந்த செயல்களைத் தெரிவு செய்யும் வரை மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் வழங்குக..
- நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் மீற்றர் கோலின் நுனியில் பொருத்தப்பட்டிருக்கும் கொடியைப் பெற்றுக் கொள்வதற்கு வழிப்படுத்துக.
- **பண்பிற் சிறந்த பிள்ளை** என்ற கொடியைப் பெற்றுக் கொள்வதற்குச் சிறந்த செயல்களைச் செய்தல் வேண்டுமெனக் கூறி அவற்றை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்க.

**அட்டைகளில் குறிப்பிடப்படும் செயல்கள்:**

**உ-ம்:**

1. அமைதியாக இருத்தல்.
2. நேரத்திற்கு வருதல்.
3. ஒற்றுமையாக இருத்தல்.
4. உயிர்களுக்குத் துன்பம் செய்தல்.
5. பொய் பேசுதல்.

**கணிப்பீடு** :

- நல்ல பிள்ளை தினத்தில் முன்மாதிரியான சைவப் பிள்ளையாக நடந்துகொள்வார்.
- பெற்றோருடன் சேர்ந்து சிறந்த செயல்களில் ஈடுபடுவார்.
- பண்பான பிள்ளையின் குணங்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்**

- நல்ல பிள்ளை தினத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் கொண்டு நாளாந்த வாழ்வில் நற்பண்புகள் கொண்டவராக வாழ்வதற்கு முயற்சி செய்தல்.

# கணிப்பீடு செய்தல்

## 1.0 அறிமுகம்

மாணவரின் கற்றல் முன்னேற்றம் மற்றும் முக்கிய தீர்மானம் எடுத்தல் என்பனவற்றுக்கு தகவல் சேகரித்தல் அத்தியாவசியம். இவ்வாறான நோக்கத்துடன் **தகவல் சேகரித்தல்** எனும் செயற்பாடானது **கணிப்பீடு செய்தல்** எனக் கருதப்படுகின்றது.

மாணவரின் கல்வி முன்னேற்றம் பற்றிய தீர்மானம் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிப்பதற்குப் பல்வேறு முறைகள் உள்ளன. இவற்றை இரு பகுதிகளாக விரிவாக வகைப்படுத்தலாம்.

I. விசேடமான முன் ஆயத்தம் எதுவுமின்றி மாணவர் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எதுவித இடையூறுகளும் ஏற்படாது தகவல் சேகரித்தல் - முறைசாராத கணிப்பீடு செய்தல்.

II. முன் ஆயத்தமுடன் திட்டமிடப்பட்டுக் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி முழு அவதானத்தையும் செலுத்தித் தகவல் சேகரித்தல் - முறையான கணிப்பீடு செய்தல். அதே போன்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கணிப்பீட்டைச் செய்யலாம்.

- கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முன் (ஆயத்தம் மற்றும் முன்னைய அடைவுகளைத் தேடிப்பார்த்தல்.)
- கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளுக்கு இடையில் அடிக்கடி (மாணவரின் கற்றல் முன்னேற்றம் மற்றும் கற்றலின்போது ஏற்படும் சிரமங்களைக் கண்டறிவதற்கு)
- கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் இறுதியில் (மாணவர் குறிப்பிட்ட கற்றல் பகுதியை வெற்றிகரமாக முடித்துள்ளனரா என்பதைக் கண்டறிவதற்காக)

இவ்வாறாகக் கணிப்பீட்டு முறைகள் பலவற்றை அறிந்து கொள்ள முடியும். அவற்றுள் முறைசாராத வகையில் எப்போதும் அல்லது தொடர்ச்சியாகச் செய்யப்படும் கணிப்பீடானது முதன்மை நிலை 1 இல் விசேட இடத்தைப் பெற்றுள்ளது.

## 2.0 முறைசாராத வகையில் **தொடர்ச்சியான கணிப்பீடு செய்தல்**

### 2.1 தகவல் சேகரித்தல்

**முறைசாராத தொடர்ச்சியான கணிப்பீடு செய்தல்** என்பதன் கீழ் பயன்படுத்தக் கூடிய முறைகளில் முதன்மை நிலை 1 இல் பின்வருவன முக்கியமானவையாகும்.

- **மாணவரை அவதானித்தல்**
- செயற்பாடுகளில் குழுவாக ஈடுபடும் வேளையில்
- விளையாட்டுக்கள் / மகிழ்ச்சியான நிகழ்வுகளில் ஈடுபடும் வேளையில்
- சுயாதீனமாக வேலைகளில் ஈடுபடும் வேளையில்

இங்கே ஒரு சந்தர்ப்பத்தில் தனி ஒரு மாணவனின் தனியான செயற்பாட்டில் மட்டுமே ஆசிரியரின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- ஒப்படை, வீட்டுவேலை, தனியாகச் செய்யும் வேலைகள் போன்றனவற்றுக்குப் புள்ளி வழங்குதல். இங்கு பிள்ளைகள் விடும் தவறுகள் மற்றும் எண்ணக்கரு தொடர்பான தெளிவின்மை போன்றவற்றில் ஆசிரியர் விசேட கவனம் செலுத்த வேண்டும். தவறு செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது எண்ணக்கரு தொடர்பான தெளிவின்மை போன்றனவற்றிற்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டு பிடித்து மிக விரைவில் மாற்று நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

- மாணவருடன் தனியாகவும் குழுவாகவும் கதைத்தல்
- மாணவரிடம் வாய்மொழி வினாக்கள் கேட்டல்
- மாணவர் கூறுவதைச் செவிமடுத்தல் (மாணவர் - மாணவருடன் கலந்துரையாடல், குழு வேலைகளின்போது)
- மாணவர்கள் வகுப்பறையிற் செய்யும் முன்வைப்புக்கள், முன்மாதிரிகளை அவதானித்தல், செவிமடுத்தல்
- மாணவரின் ஆக்கச் செயற்பாடுகளைப் பரிசீலித்தல்
- மாணவரின் ஒப்படைகள், ஆக்கச் செயற்பாடுகள் தொடர்பான விசேடமாக எழுத்து வேலை தொடர்பான தாள்களைக் கோவைப்படுத்தல். (செயலடைவுக் கோவை)

இவ்வாறான முறைகளில் தகவல் சேகரிக்கும் வேளைகளில் நோக்கங்கள் மற்றும் நியதிகளையே எப்போதும் இலக்காகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஏதாவது பாடவிடயத்தின் கீழ் விதந்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கற்றல் எதிர்பார்ப்பையும் வெற்றிகரமாக அடைந்துள்ளாரா? அன்றேல் அது தொடர்பாக சிரமப்படுகின்றாரா? என்பதைத் தீர்மானித்து, எடுத்த தீர்மானத்தைப் பொருத்தமான வகையில் அட்டவணையில் குறிப்பிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.2 தகவல்கள் அறிக்கைப்படுத்தும் அட்டவணையும் அதனைப் பயன்படுத்தலும்**

இந்த விடயத்தின் கீழ் ஒவ்வொரு கற்றல் எதிர்பார்ப்புக்கும் பொருத்தமாக ஒவ்வொரு மாணவர் தொடர்பாகச் சேகரிக்கும் தகவல்களையும் முறையான அறிக்கையாகச் சமர்ப்பிப்பதற்கு மாதிரி ஒன்று தரப்பட்டுள்ளது. நீங்கள் சேகரிக்கும் தகவலைக் கீழ்க் காணப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் தெரிவுசெய்து பொருத்தமான கூட்டில் அடையாளத்தைக் குறித்து அறிக்கை தயாரிக்கவும்.

ஏதாவது ஒரு மாணவன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும்

- இந்த அடையாளத்தை எடுத்திருப்பின் ஆசிரியர் அந்த மாணவரில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாணவனின் இடர்ப்பாட்டை அறிந்து அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு கணிப்பீட்டைச் செய்ய வேண்டும். குறிப்பிட்ட அடையாளத்தை மாற்றும் வரையில் ஆசிரியர் செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே போன்று ஏதேனும் ஒரு கற்றல் நோக்கத்தில் மாணவர்களில் அநேகர்

- இந்த அடையாளத்தைப் பெற்றிருப்பின் குறிப்பிட்ட விடயத்தில் ஆசிரியரின் கற்பித்தல் முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு. ஆதலால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது கற்பித்தல் முறைகளை மீண்டும் கவனத்திற் கொண்டு கற்பித்தல் முறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.3 சிறு குறிப்பு எழுதி அறிக்கை சமர்ப்பித்தல்**

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் அவர்களது சிறப்பு ஆற்றல் குறித்த சிறு தகவல் குறிப்பு எழுதப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர் வெளிப்படுத்தும் விசேட ஆற்றல் அல்லது பலவீனம் போன்றன இவற்றுள் உள்ளடக்கப்படும். குறிப்புப் புத்தகத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை ஒதுக்கிப் பதிவுகளை மேற்கொள்ள இயலும். அல்லது பதிவுகளைக் கோவைகளில் பதிந்து வைத்துக்கொள்ள முடியும். இவ்வாறு செய்யும் போது திகதி மற்றும் விசேட அவதானிப்புக்கள் பற்றிய சிறு குறிப்புக்களை முறையாக எழுதுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.0 வேறு விடயங்கள்

விசேடமாக வகுப்பறையில் தயாரிக்கப்பட்டதும், பரிந்துரைக்கப்பட்ட கால வேளையினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய முறைசார் பரீட்சைகள் இந்நிலையில் பொருத்தமற்றதாகும். ஆகவே, மூன்றாம் தவணைக்கு முன்னர் இத்தகைய பரீட்சைகளை நடாத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

- வெளிவாரியாகத் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரங்களைப் பரீட்சைக்காகப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இங்கு வகுப்பாசிரியர் அல்லது பாடசாலை ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கணிப்பீட்டு உபகரணங்களுக்கே முன்னுரிமையளித்தல் வேண்டும்.

- ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தினை இன்னொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்தல் வேண்டும். மாணவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பதனால் மாணவர் பற்றிய சரியான தீர்மானங்களை எடுப்பதில் சிரமங்களேற்படும்.

- ஒரு மாணவனின் தற்போதைய நிலையை முன்னைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பயனளிக்கும் ஆதலால், இது தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.

# சைவநெறி பாடக் கணிப்பீட்டு படிவம்

| | |
|---|---|
| தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார் | √ |
| தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | • |

| | | | | | மாணவரின் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | 01. பிள்ளையாரை வணங்கியே கருமங்களைத் தொடங்குவார். |
| | | | | | 02. சிவமந்திரத்தை உச்சரித்து வழிபடுவார். |
| | | | | | 03. வகுப்பறை வணக்க மூலையில் சுவாமிப் படங்களுக்குப் பூக்களை வைத்து வணங்குவார். |
| | | | | | 04. பெற்றோரைக் காலையிலும் மாலையிலும் வணங்குவார். |
| | | | | | 05. விபூதிக்கு மதிப்பளிப்பார். |
| | | | | | 06. பாடசாலை நாளாந்தக் கடமைகளை முறைப்படி நிறைவேற்றுவார். |
| | | | | | 07. பூசைப் பொருட்களை முறையாக ஒழுங்குபடுத்துவார். |
| | | | | | 08. ஆலய வழிபாட்டில் பங்குகொண்டு, ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவார். |
| | | | | | 09. காலையும் மாலையும் கடவுளை வணங்குவார். |
| | | | | | 10. சமயப் பண்டிகைகளின் போது உதவி செய்வார். |
| | | | | | 11. பாடசாலையில் காலைப் பிரார்த்தனையில் ஈடுபடுவார். |
| | | | | | 12. தேவாரங்களை மனனஞ் செய்வார். |
| | | | | | 13. தேவாரத்தைப் பக்தியோடு, குழுவாகவும் தனியாகவும் பாடுவார். |
| | | | | | 14. அறநெறிப் பாடல் அடிகளை மனனஞ் செய்து பாடுவார். |
| | | | | | 15. சைவ சமயக் கதைகளை, பக்தியுடன் கூறுவார். |
| | | | | | 16. சைவ சமயக் கதைகளைப் பாத்திரமேற்று நடிப்பார். |
| | | | | | 17. சம்பந்தர் கதையினைப் பக்தியுடன் கூறுவார். |
| | | | | | 18. சம்பந்தர் கதையை நடித்துக் காட்டுவார். |
| | | | | | 19. அதிபர், ஆசிரியர்களைக் கனம் பண்ணுவார். |
| | | | | | 20. பெற்றோருடன் இணைந்து ஏழைகளுக்கு உதவி செய்வார். |
| | | | | | 21. சுய சுத்தம் பேணுவார். |
| | | | | | 22. பிராணிகளுக்கு இரங்குவார். |
| | | | | | 23. வகுப்பறையில் ஒற்றுமையாகச் செயற்படுவார். |
| | | | | | 24. எந்த வேளையிலும் உண்மை பேசுவார். |
| | | | | | 25. எல்லோருடனும் பகிர்ந்து உண்பதில் ஈடுபடுவார். |
| | | | | | 26. பெறுமதியான செயல்களில் ஈடுபடுவார். |
| | | | | | 27. வகுப்பறையில் எப்போதும் நற்பண்புகளைப் பேணுவார். |